20th January 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதல் அமைச்சர்கள் சந்தித்துப் பேசவில்லை. இது சம்பந்தமான கடிதப் போக்கு வரத்துக்கள் யூனியன் மினிஸ்ட்ரி அளவில் அனுப்பப்பட்டு இருக்கிறது. அவர்கள் அதைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு உதவி செய்ய முடியுமானால் செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கேரள ராஜ்யத்திற்கும், நம் ராஜ்யத்திற்கும் பொதுவான எத்தனை திட்டங்கள் ஆலோசனையில் இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்மைப் பொறுத்த அளவில் எல்லா ஆறுகளும், நதிகள் அவைகளுடைய பிரிவுகள் எல்லாவற்றையும் பார்த்து 6 திட்டங்களில் பங்கு கொள்ள முடியும் என்று நம் என்ஜினியர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்களுக்கு எழுதி இருக்கிறோம்.

கிராம மருத்துவர்கள் நியமனம்

*25 **கேள்வி.—திரு து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள மருத்துவ மனைகளுக்கு BI and ‘C’ கிரேடு மருத்துவர்களை வேலைக்கு அமர்த்த பஞ்சாயத்து யூனியன்கள் சர்க்காரிடம் அனுமதி கோரியுள்ளனரா ?

(இ) சர்க்கார் அனுமதி அளித்த பிறகு எவ்வளவு காலத்தில் அவர்கள் அங்கீகரிக்கப்படுகிறார்கள் ?

(உ) அங்கீகரிக்கப்பட்டவர்களின் பதவிக்காலம் ஆண்டு தோறும் ரின்யூவல் செய்யப்படுகிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் B I and C வகுப்பு மருத்துவர்களை கிராம மருத்துவர்களாக நியமிப்பதற்கான திட்டங்களை மருத்துவத் துறை நெறியாளருக்கு அனுப்புகிறார்கள். அந்தத் திட்டங்களை மருத்துவத் துறை நெறியாளர்கள் தற்காலிகமாய் ஓராண்டு கால அளவிற்கு அல்லது தகுதிபெற்ற ‘A’ வகுப்பு மருத்துவர்கள் கிடைக்கும் வரை இவற்றில் எது முந்தியதோ அந்தக் கால அளவிற்கு அனுமதிக்கிறார்.

(உ) ‘A’ வகுப்பு மருத்துவர்கள் கிடைக்கவில்லையென்றால் C வகுப்பு மருத்துவர்கள் தொடர்ந்து கிராம மருத்துவர்களாகப் பணியாற்ற அனுமதி வழங்கப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : பதவிக்காலம் முடிந்தவுடனே மேற்கொண்டும் பதவியில் நீடித்து இருப்பதற்கு ரினியூவலுக்கு மருத்துவதுறையினருக்கு எழுதினால் உடனடியாக அனுமதி வழங்கப்படுவதில்லை. மிக்க காலதாமதமாகிறது. அப்படியின்றி உடனடியாக அனுமதி வழங்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கே அந்தப் பவர் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

[20th January 1965

அவர்கள் அந்த மருத்துவர்கள் பதவியில் நீடிப்பதற்கு உத்தரவு போட்டுவிட்டு, அந்த ஆர்டரை அனுப்பினுல் இவர்கள் அதைக் கன்பர்ம் செய்கிருர்கள்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : அநேக கிராமங்களில் மருத்துவர் இல்லாத காரணத்தினுல் BI and C டாக்டர்களை நியமிப்பது என்ருல் அதற்கு யார் அனுமதி கொடுக்க வேண்டும்? அனுமதி கோரி எழுதினுல் தாமதம் இல்லாமல் கொடுப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கெல்லாம் டாக்டர்கள் இல்லையோ அங்கெல்லாம் நியமிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்தால் ரிஜிஸ்டர் செய்து கொண்டிருக்கிற டாக்டர்களை நியமித்துக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. ரிஜிஸ்டர் செய்து கொள்ளாத டாக்டர்களை நியமிப்பது என்ருல் தான் அனுமதி கொடுப்பதற்கில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் சிபார்சு செய்து அனுப்பும் ஸி கிரேடு வைத்தியர்களை டி.எம்.ஓ. அங்கீகரிப்பதற்கில்லை என்று சொல்லிவிடுகிருர்கள். அவ்வாறு இல்லாமல் ஸி கிரேடு வைத்தியர்களை நியமித்துக் கொள்ள அனுமதி வழங்கவேண்டுமென்று உத்திரவிடுவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பி கிரேடு வைத்தியர்கள் கிடைக்காவிட்டால் தான் ஸி கிரேடு வைத்தியர்களைப் போட்டுக் கொள்ளலாம் என்று உத்தரவு இருக்கிறது. பி கிரேடு வைத்தியர்கள் இருக்கும்போது போட்டுக் கொள்ள அனுமதிப்பதற்கில்லை.

திரு. க. ர. முனிரத்தினம் : கிராம பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கிற டாக்டர்களுக்குப் போதிய சம்பளம் கிடைக்காத காரணத்தினுல் அங்குள்ளவர்கள் ராஜீநாமா செய்துவிட்டுப் போய் விடுகிருர்கள். அப்படியுள்ள இடங்களில் டாக்டர்களைப் போட உடனடியாக ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரூரல் டிஸ்பென்சரியைப் பொறுத்த வரையில் அவர்கள் மருத்துவர்களுக்கு ஆகும் பாதிச் செலவை ஒத்துக்கொண்டார்கள் என்ருல் அரசாங்கம் பாதிச் செலவுத் தொகையைக் கொடுக்கிறது. இப்போது தகராறு என்னவென்ருல் அரசாங்கம் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்து விடுகிருர்கள். பஞ்சாயத்து யூனியன்கள்தான் பாக்கித் தொகையையும் போட்டு அவர்கள் வேலை செய்யும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. சா. கணேசன் : பல கிராமங்களிலே டாக்டர்கள் இல்லாத கஷ்டம், அதனுல் ஏற்படுகிற அவந்திர நிலைமை எல்லோருக்கும் தெரியும். அந்த நிலைமையில் பக்கத்து நகரங்களில் இருக்கிற டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை செய்வது என்ருல் கிராமங்களில் உள்ளவர்களுக்கு வைத்திய வசதி கிடைக்கக் கூடும். ஆனுல் கவர்மெண்டு கொடுக்கிற ஊதியம் அவர்களுடைய

20th January 1965]

போக்கு வரத்துச் செலவுக்குக்கூட கட்டுப்படியாவதில்லை. ஆகவே அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவது இன்னும் செம்மையாக அவர்கள் நடந்துகொள்வதற்கும், கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிடைப்பதற்கும் நல்ல அனுகூலமாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எல்லா இடங்களிலும் ப்ரைமரி சுகாதார நிலையங்கள் ஆரம்பித்துவிட்டால் இந்தப் பிரச்ச்னைக்கே இடமில்லை. இன்றைய தினம் ப்ரைமரி சுகாதார நிலையங்கள் ஏற்பட்டுள்ள இடங்களில் டாக்டர்கள் வாரத்திற்கு இரண்டு முறை சப்சென்டர்களுக்குப் போய்வருகிருர்கள். இது கிராம மக்களுக்கு வைத்திய வசதி பெற உதவியாய் இருக்கும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தற்போது பஞ்சாயத்து கூட்டு மன்றங்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் லோகல் பண்டு ஆஸ்பத்திரிகளில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப் போடவேண்டுமென்ருல் அனுமதி வழங்கப்படுவதில்லை. அந்த டாக்டர்களுக்கு ஆகும் செலவை அவர்களே சரிக்கட்டிக்கொள்ளத் தயாராக இருக்கும் போது அனுமதி வழங்குவதற்கு முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் நியமிக்கப்படுவதற்கே எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிடைக்கவில்லை ; அதனுல்தான் அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆனுலும் இந்த டாக்டர்களும்கூட நல்ல அனுபவம், திறமை மிக்கவர்கள் தாம்.

ஹௌஸ் சர்ஜன்களுக்கான கௌரவ ஊதியம்

* 26 **கேள்வி.— திரு. வி. எஸ். எஸ். மணி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் ஹௌஸ் சர்ஜன்களுக்குத் தற்போது கொடுக்கப்படும் கௌரவ ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

(இ) முதுநிலை ஹௌஸ் சர்ஜன்கள் தனியே மருத்துவம் பார்க்க அனுமதிக்கப்படுகிருர்களா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) No.

மேல்மட்ட நீர்த்தொட்டிகள்

* 27 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1963-64 முடிய எத்தனை மேல் மட்ட நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன?

(இ) எத்தனை தொட்டிகளுக்கு (ஓவர் ஹெட் டாங்க்) மின்சார இணைப்பு கொடுக்கவில்லை? காரணமென்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஏழு.